**சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்திற்கான - 2018**

---

சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதற் கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 28 ஆம் திகதிய 5915–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II பீ (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏறப்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி அமைச்சு செயற்திட்டத்தின் நிலைவேற்று மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராகும். இலங்கையிலுள்ள வறுமை மற்றும் பாதிப்பிற்குள்ளான குழுக்களின் நலன்களிற்காக சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்படுத்தப்பட்ட மூலதனம், வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றிற்கு பங்களிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,212 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியன் தொகையானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 மார்ச் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமையைத் தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 03 கூறுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றதுடன் பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டிகளானது ஒருங்கிணைந்த சமூக பதிவேடு மற்றும் ஒன்றிணைந்த சேவை வழங்கல் முறைமைகளை கட்டியெழுப்புதல் போன்ற நடவடிக்கைகளை கொண்டுள்ளதுடன் செயற்திட்ட அமுலாக்கல், கண்காணிப்பு மற்றும் திட்டமிடலிற்கு உதவுதல். செயற்திட்டத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான பௌதீக செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கூறு | செயற்பாடு | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்பாட்டு முன்னேற்றத்தின் கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | ஒருங்கிணைந்த சமூக பதிவேடொன்றைத் தயாரித்தல் | நலன்புரி நலனோம்பல் சபையின் ஸ்தாபிப்பு | நலன்புரி நலனோம்பல் சபை ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் இது எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்பட்டிருந்தது. | குறித்த நபர்களால் குறித்த நலன்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | முக்கியமான நபர்களைச் சேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தமையால் நலன்புரி நலனோம்பல் சபை செயற்பட முடியாதிருந்தது. | பொறுப்புவாய்ந்த தரப்பினரை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் சபைக்கு ஏற்ற நபர்களை நியமித்துக் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | ஒருங்கிணைந்த சமூக பதிவேடொன்று | ஒருங்கிணைந்த சமூக பதிவேடொன்றைத் தயாரித்தல் | தற்போதைய மற்றும் முன்னாள் பயனாளிகளின் தரவுகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதங்களுடன் நிறைவேட்டப்படும். | சமூக பதிவேட்டில் தகவல் அமைப்புக்கு ஒரு முறைமை விருத்தியாளரின் பெறுகையில் தாமதம் காரணமாக | சீர்திருத்தப்பட்ட நலன்புரி அமைப்பின் மையமாக இருப்பதால் ஒருங்கிணைந்த சமூகப் பதிவேட்டை நிறுவுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | ஒருங்கிணைந்த சேவை விநியோக முறை | ஒருங்கிணைந்த சேவை விநியோக முறைமை அபிவிருத்தி | நலன்புரி நலத்திட்டங்களை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. சமூக பதிவுத் தகவல் அமைப்பிற்கு சமுர்த்திப் பயனாளிகள் தொடர்பான தரவுகளை விரிவுபடுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் படி, முகாமைத்துவ தகவல் முறைமைக்கான அணுகல் வசதிகள் வழங்கப்படுவதற்கு ஆகக் குறைந்தது 10 சதவீத பிரதேச செயலகங்களிற்கு வழங்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறெனினும், அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதத்துடன் நிறைவேற்றப்படும். | இவ் இலக்குகளை செயற்திட்டம் எய்தியிராததுடன் உரிய தகவல்களைச் சேகரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எய்தியிருக்கவில்லை | முறைமை விருத்தி நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவருடாக முறைமை விருத்திக்கு செல்வாக்கு செலுத்துவது அவசியமாகும். |
| (ஈ) | ஒருங்கிணைந்த சேவை விநியோக முறை | வரிசை அமைச்சிற்கு செயற்திட்ட தொழில்நுட்ப அலகை ஸ்தாபிப்பதற்கு | அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அலகை ஸ்தாபிப்பதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதமடையும். | முறையாக விபரிக்கப்பட்டிருக்கவில்லை | திட்டமிடப்பட்டவாறு, ஸ்தாபிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| **கணக்காய்வு பிரச்சனைகள்** | **தாக்கம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| விடுவிப்பு இணைப்பு விளைவுகளின் செயற்பாட்டை மெய்மையாய்வு செய்வதற்கு சுயாதீனமான மூன்றாம் தரப்பினர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை | மூன்றாம் தரப்பினர் சான்றுறுதிப்படுத்தப்படாது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கு கடன் தவணைப்பணங்கள் விடுவிக்கப்படுவதில்லை. | சமூகப் பதிவேட்டு தகவல் முறைமை தாமதமானமையால் இவ் இலக்கு தாமதமானது. | செயற்திட்ட செயற்பாட்டு கைநூலின் படி, சுயாதீனமான மூன்றாம் தரப்பினர் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |